இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

விசேட தேவைகள் சார் கல்வியில் (சிறப்பு) கல்விமாணி நிகழ்ச்சித்திட்டம்- 2022/2023

மட்டம் - 06

இறுதிப்பரீட்சை – 2022/2023

**SNU6223/ESU4123– சிறுவர் உரிமைகள்**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 03.12.2023 நேரம்: மு.ப. 9.30 - பி.ப. 12.30

பகுதி I இல் உள்ள அனைத்து வினாக்களுக்கும் பகுதி II இல் எவையேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடை எழுதுக.

## பகுதி – I

1. குழந்தைகள் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் சமவாயத்தின் (UNCRC) நான்கு (04) முக்கிய கொள்கைகளை குறிப்பிடுக.
2. விசேட தேவையுடைய குழந்தைகளின் வளர்ச்சி மற்றும் விருத்திக்கான உரிமையைப் பாதுகாப்பதில் பாடசாலையின் ஐந்து (05) செயல்பாடுகளை எழுதுக.
3. இலங்கைப் பிள்ளைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக பிரித்தானியர்களால் கொண்டுவரப்பட்ட ஐந்து (05) கட்டளைச் சட்டத்தைக் குறிப்பிடுக.
4. விசேட தேவையுடைய குழந்தைகளின் மனரீதியான துஸ்பிரயோகத்திலிருந்து பாதுகாக்க குடும்பத்தால் செயல்படுத்தக்கூடிய ஐந்து (05) உத்திகளைப் பரிந்துரைக்க.
5. இலங்கை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் மூன்று (03) முக்கிய பாத்திரங்களைச் சுருக்கமாக விளக்குக.
6. பாடசாலையில் விசேட தேவையுடைய பிள்ளைகளின் விளையாட்டு மற்றும் ஓய்வு நேரம் மீறப்படும் ஐந்து (05) சந்தர்ப்பங்களை எழுதுக.
7. விசேட தேவையுடைய குழந்தைகளின் தாய்மார்கள் தங்கள் பாதுகாப்பிற்கான உரிமையைப் பாதுகாக்க முயலும் போது அவர்கள் எதிர்கொள்ளும் ஐந்து (05) பிரச்சினைகளைக் குறிப்பிடுக.
8. பாடசாலையில் விசேட தேவையுடைய குழந்தைகளின் குழந்தை உரிமைகளைப் பாதுகாப்பதில் ஆசிரியர்களின் ஐந்து (05) பொறுப்புக்களைப் பட்டியலிடுக

**(05 x 08 = 40 புள்ளிகள்)**

## பகுதி – II

09. "இலங்கையில் காலனித்துவத்திற்கு முந்தைய சமூகம் குழந்தை உரிமைகள் என்ற கருத்தை அங்கீகரிக்கவில்லை என்றாலும், குழந்தைகளுக்கு கவனிப்பும் பாசமும் மறுக்கப்பட்டது என்று அர்த்தம் இல்லை"

**i.** இந்த கூற்று பற்றிய உங்கள் கருத்துக்களை பொருத்தமான எடுத்துக்காட்டுக்களுடன் குறிப்பிடுக.

**(10 புள்ளிகள்)**

**ii.** சுதந்திரத்திற்குப் பின்னர் இலங்கை அரசாங்கம் சிறுவர் உரிமைகள் தொடர்பான பல்வேறு நடவடிக்கைகளை அமுல்படுத்துவதை உறுதிப்படுத்துவதற்காக எடுத்த ஐந்து (05) முக்கிய முயற்சிகளை விளக்குக.

**(10 புள்ளிகள்)**

10. "குழந்தைகளின் உரிமைகளை நிர்வகிக்கும் ஒரு முக்கிய கொள்கை பாகுபாடு காட்டாத கொள்கையாகும்"

i. பாகுபாடு காட்டாமை (non – discrimination) என்றால் என்ன? **(03 புள்ளிகள்)**

ii. விசேட தேவையுடைய பிள்ளைகள் தொடர்பாக இலங்கையில் உள்ள பாடசாலைகளில் மீறப்படும் மூன்று (03) சூழ்நிலைகளைச் சுருக்கமாக விளக்குக. **(07 புள்ளிகள்)**

iii. பாகுபாடு காட்டாமை கொள்கையை உறுதி செய்வதற்காக சுதந்திரத்திற்குப் பிறகு இலங்கை அரசாங்கம் எடுத்த முக்கிய நடவடிக்கைகளை விளக்குக. (10 புள்ளிகள்)

11.

i. இலங்கையில் விசேட சூழ்நிலையில் உள்ள குழந்தைகள் தொடர்பான குழந்தை உரிமைகளை பரீட்சிக்குக. **(06 புள்ளிகள்)**

ii. இந்தக் குழந்தைகளின் உரிமைகளை உறுதிப்படுத்த குறைந்தபட்சம் நான்கு (04) பரிந்துரைகளை முன்வைக்குக. **(06 புள்ளிகள்)**

iii. அந்த பரிந்துரைகளை செயல்படுத்தும் போது சமூகம் எதிர்கொள்ளும் சவால்களை பட்டியலிடுக. **(08 புள்ளிகள்)**

12.

i. தத்தெடுத்தல் என்றால் என்ன? **(02 புள்ளிகள்)**

ii. விசேட தேவையுடைய குழந்தைகளைத் தத்தெடுக்கும் போது அனாதை இல்லங்கள் எதிர்கொள்ளும் ஐந்து (05) இடர்பாடுகளை (difficulties) விவரிக்குக. (08 புள்ளிகள்)

iii. மேலே குறிப்பிட்டுள்ள இடர்பாடுகளைக் குறைக்க பொருத்தமான ஐந்து (05) பரிந்துரைகளை வழங்குக. **(10 புள்ளிகள்)**

13. **"விசேட சூழ்நிலையில் வைக்கப்பட்டுள்ள குழந்தைகளின் உயிர்வாழ்வதற்கான உரிமையைப் பாதுகாக்க அரசு சாரா நிறுவனங்கள் (NGO க்கள்) ஆதரிக்கலாம்".**

i. விசேட சூழ்நிலையில் வைக்கப்பட்ட குழந்தைகள் யார்? (04 புள்ளிகள்)

ii. விசேட சூழ்நிலைகளில் குழந்தைகள் உயிர்வாழும் உரிமையைப் பாதுகாப்பதில் (NGO க்கள்) ஆதரிக்கும் மூன்று (03) வழிகளைச் சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

iii. மேற்கூறிய உத்திகளைச் செயல்படுத்தும் போது NGO எதிர்கொள்ளும் இரண்டு (02) இடர்பாடுகளைக் குறிப்பிடுக. மற்றும் அவற்றைக் குறைக்க ஒவ்வொன்றுக்கும் இரண்டு (02) பரிந்துரைகளை முன்வைக்குக. (10 புள்ளிகள்)

14.

i. விசேட சூழ்நிலையில் குழந்தைகள் பற்றிய சமூகத்தின் விழிப்புணர்வை அதிகரிக்க வெகுஜன ஊடகங்களால் எடுக்கக்கூடிய நான்கு (04) உத்திகளைச் சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

ii. அவற்றைச் செயல்படுத்தும் போது வெகுஜன ஊடகங்கள் எதிர்கொள்ளும் நான்கு (04) பிரச்சினைகளைக் குறிப்பிடுக. (08 புள்ளிகள்)

iii. விசேட சூழ்நிலையில் குழந்தைகளைப் பற்றி சமூகம் அறிந்து கொள்வதில் உள்ள நன்மைகளைப் பொருத்தமான உதாரணங்களுடன் ஆராய்க. (08 புள்ளிகள்)

- *முழுப்பதிப்புரிமை பெற்றது* -